**செய்தி வெளியீடு எண்: 600** **நாள்:18.08.2020**

**தமிழ்நாடு அரசு**

**தமிழ்நாடு வக்ஃபு வாரிய முத்தவல்லிகளுக்கான தேர்தல்**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தல் நடத்த, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் மாநில சட்டப்பேரவை உறுப்பினர்கள், முஸ்லிம் முன்னாள் பார்கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் முத்தவல்லிகள் பிரிவுகளுக்கு தேர்தல் கால அட்டவணை **15.07.2020** நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிவிக்கையின்படி முத்தவல்லிகள் பிரிவிற்கான தேர்தல் **19.08.2020** அன்று நடைபெறுவதாக இருந்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கலைக்கப்பட்டதை எதிர்த்தும் வக்ஃபு வாரியத்தை திருத்தி அமைப்பதற்காக வெளியிடப்பட்ட தேர்தல் அறிவிக்கையை எதிர்த்தும் வழக்குகள் W.P. No.726/2020, W.P. No.8377/2020 and W.P. No.9557/2020 தொடரப்பட்டன.

அவ்வழக்குகளில், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கலைக்கப்பட்டது செல்லும் எனவும், இருப்பினும் இது முத்தவல்லிகள் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களான திரு.சையத் அலி அக்பர் மற்றும் டாக்டர் ஹாஜா கே. மஜீத் ஆகியோருக்கு பொருந்தாது எனவும் சென்னை உயர்நீதிமன்றம் **17.8.2020** தீர்ப்பளித்துள்ளது.

மேற்காணும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக, **19.08.2020** அன்று நடைபெறவிருந்த இரண்டு முத்தவல்லிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் தள்ளி வைக்கப்படுகிறது.

தேர்தல் அதிகாரி மற்றும் அரசு முதன்மைச் செயலர்
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்தறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**